3. 'இது முதல்' என்று கூறுதல். (இது அபி என்ற சொல்லால் கொள்ளப்பட்டது)

वणिक्पथः पुरं वेदो निगमा ....

1. निगमः (पुं)

1. நிகம:(பு-அ) **1. கடைத்தெரு**
2. பட்டணம்
3. வேதம்

..........................नागरो वणिक् ।

नैगमो द्वौ ....

1. नैगमः (पुं)

1. நைகம: (பு-அ) **1. பட்டணத்தில் வாழ்பவன்**
2. வர்த்தகன்

..............बले रामो लीनचारुसिते त्रिषु ॥ 1341

1. रामः (पुं/स्त्री/न)

1. ராம: (பு-அ) **1. பலராமன்**

ராமா (பெ-ஆ) **1. கருப்பானது 2. அழகானது**
ராம (ந-அ) **3. நீலம் 4. வெறுமை**

शब्दादिपूर्वो वृन्देऽपि ग्रामः ....

1. ग्रामः (पुं)

1. க்ராம: (பு-அ) **1. 'ஆதி'-முதலான பொருட்கள்/ சப்தங்கள் என்ற பொருளில் शब्दग्रामः, गुणग्रामः உதாரணமாகக் கொள்க**

2. கிராமம்/ஊர். அதிலுள்ள அனைத்தும் என்று வரும் - இது, அபி என்ற சொல்லால் கொள்ளப்பட்டது.

.... क्रान्तौ च विक्रमः ।

1. विक्रमः (पुं)

1. விக்ரம: (பு-அ) **1. ஆக்கிரமித்தல்**

2. பராக்கிரமம் - இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

स्तोमः स्तोत्रेऽध्वरे वृन्दे ....

1. स्तोमः (पुं)

1. ஸ்தோம: (பு-அ) **1. ஸ்தோத்திரம்**

2. யாகம்

3. கூட்டம்/ஸமூஹம்

.................जिह्मस्तु कुटिलेऽलसे ॥ 1342

1. जिह्मः (पुं)

1. ஜிஹ்ம: (பு-அ) **1. கோணல்**

2. மந்தமானது

गुल्मा रुक्तम्ब सेनाश्च ....

1. गुल्मः (पुं)

1. குல்ம: (பு-அ) **1. குன்மரோகம்(வயிற்றுவலி)**

2. புதறு

3. சேனையின் ஒருவகை

.... जामिः स्वसृकुलस्त्रियोः ।

1. जामिः (स्त्री)यामिः என்றும் பாடமுண்டு

1. ஜாமி: (பெ-இ) 1. உடன் பிறந்தவள்.
2. நற்குலப்பெண்
जामि (अव्ययं) 3. சோம்பேரித்தனம்

क्षितिक्षान्त्योः क्षमा युक्ते क्षमं शक्ते हिते त्रिषु ॥ 1343

1. क्षमा (पुं/स्त्री/न)

1. க்ஷமா (பு/பெ/ந-அ) 1. பூமி
2. பொறாமை (எனில்- பெ)
3. சரியானது (எனில்- ந)
4. சாமர்த்தியம் (எனில்)(பு/பெ/ந)
5. ஹிதஞ்செய்பவன் எனில்(பு/பெ/ந)

त्रिषु श्यामौ हरित्कृष्णौ श्यामा स्याच्छारिवा निशा ।

1. श्यामः (पुं/स्त्री/न)

1. ச்யாம: (பு-அ) 1. பசுமையானது
ச்யாமா (பு/பெ/ந-ஆ) 2. கறுப்பானது
3. நறுமணம்
4. இரவு

ललामं पुच्छपुण्ड्राश्वभूषा प्राधान्यकेतुषु ॥ 1344

1. ललामं (न-न्), ललाम (पाठं)

1. லலாமம் (ந-ந்) 1. வால்
லலாம (பாடம்)(ந-அ) 2. நெற்றித்திலகம்
3. குதிரையின் அணிகள்
4. குதிரை
5. ஆபரணங்கள்
6. முக்கியமானது
7. கொடி

सूक्ष्ममध्यात्ममप्या ....

1. सूक्ष्म (पुं/स्त्री/न)

1. ஸூக்ஷ்ம (பு/பெ/ந-அ) **1. பரமாத்மா**
2. மிகவும் சிறியது

.... द्वौ प्रधाने प्रथमं त्रिषु ।

1. प्रथमं (पुं/स्त्री/न)

1. ப்ரதம: (பு-அ) *1. முதல்* **2. முக்கியமானது**
ப்ரதமா (பெ-ஆ)
ப்ரதமம் (ந-ஆ)

वामौ वल्गुप्रतीपौ द्वौ ....

1. वामः (पुं/स्त्री/न)

1. வாம: (பு/பெ/ந-அ) **1. மனோஹரமானது**
2. எதிரிடையானது

.............................अधमौ न्यूनकुत्सितौ ॥ 1345

1. अधमः (पुं/स्त्री/न)

1. அதம: (பு-அ) **1. குறைச்சலானது**
அதமா (பெ-ஆ) **2. நிந்திக்கப்பட்டது**
அதமம் (ந-அ)

जीर्णं च परिभुक्तं च यातयाममिदं द्वयम् ।

1. यातयामं (पुं/स्त्री/न)

1. யாதயாம: (பு-அ) **1. செரித்தல்/ஜீர்ணமாதல்**
யாதயாமா(பெ-ஆ) **2. அனுபவிக்கப்பட்டது**
யாதயாமம் (ந-அ)

"ம" என்ற எழுத்தில் முடியும் சொற்கள் இவை

--------●-------

अथ यान्तवर्गः

ய வில் முடியும் சொற்கள்

तुरङ्गगरुडौ तार्क्ष्यौ ....

1. तार्क्ष्यः (पुं)

1. தார்க்ஷ்ய: (பு-அ) ***1. குதிரை***
2. கருடன்

.....................निलयापचयौ क्षयौ ॥ 1346

1. क्षयः (पुं)

1. க்ஷய: (பு-அ) ***1. வீடு***
2. அழிவு (நாசம்)

श्वशुर्यौ देवरश्यालौ ....

1. श्वशुर्यः (पुं)

1. ச்வசுர்ய: (பு-அ) ***1. கணவனுடன் பிறந்தவன்***
2. மனைவியின் உடன் பிறந்தவன்

.....................भ्रातृव्यौ भ्रातृजद्विषौ ।

1. भ्रातृव्यः (पुं)

1. ப்ராத்ருவ்ய: (பு-அ) ***1. உடன் பிறந்தவனின் மகன்***
2. பகையாளி

पर्जन्यौ रसदब्देन्द्रौ.....................

1. पर्जन्यः (पुं)

1. பர்ஜன்ய: (பு-அ) ***1. இடிக்கும் மேகம்***
2. இந்திரன்

.....................स्यादयः स्वामिवैश्ययोः ॥ 1347

1. अर्यः (पुं)

1. அர்ய: (பு-அ) 1. மதிப்பிற்குரியவன் (ப்ரபு)
2. வைச்யன்

तिष्यः पुष्ये कलियुगे ....

1. तिष्यः (पुं)

1. திஷ்ய: (பு-அ) 1. புஷ்ய நடசத்திரம் - பூசம்
2. கலியுகம்

..................पर्यायोऽवसरे क्रमे ।

1. पर्यायः (पुं)

1. பர்யாய: (பு-அ) 1. அவஸரம் - சமயம்
2. வரிசை

प्रत्ययोऽधीनशपथज्ञानविश्वासहेतुषु ॥ 1348
रन्ध्रे शब्दे ....

1. प्रत्ययः (पुं)

1. ப்ரத்யய: (பு-அ)1. ஆதீனம் 2. ஆணை 3. அறிவு
4. நம்பிக்கை 5. ஹேது 6.இடைவெளி
7. 'க்ருத்' முதலிய ப்ரத்யயங்கள்

.... अथानुशयो दीर्घद्वेषानुतापयोः ।

1. अनुशयः (पुं)

1. அனுசய: (பு-அ) 1. நீண்ட துவேஷம்
2. பச்சாதாபம்

स्थूलोच्चयस्त्वसाकल्ये गजानां मध्यमे गते ॥ 1349

1. स्थूलोच्चयः (पुं)

1. ஸ்தூலோச்சய: (பு-அ) 1. முழுமையடையாதிருத்தல்
2. யானையின், விரைவாகவோ மந்தமாகவோ இல்லா சீரான நடை

समयाः शपथाचारकालसिद्धान्तसंविदः ।

1. समयः (पुं)

1. ஸமய: (பு-அ) *1. ஆணை - சத்தியம் 2. ஆசாரம் 3. காலம் 4. சித்தாந்தம் 5. ஞானம்*

व्यसनान्यशुभं दैवं विपदित्यनयास्त्रयः ॥ 1350

1. अनयः (पुं)

1. அநய: (பு-அ) *1. துன்பங்கள் (துன்பங்களை விளைவிக்கும் சூதாட்டம்போன்றவை)*
2. முன்வினையின் காரணமானவை
3. விபத்து/ஆபத்து

अत्ययोऽतिक्रमे कृच्छ्रे दोषे दण्डेऽपि...............

1. अत्ययः (पुं)

1. அத்யய: (பு-அ) *1. அதிக்ரமம் செய்தல்*
2. துக்கம் 3. தோஷம்
4. தண்டித்தல் 5. சர்வநாசம்
-இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

.................................**अथापदि।**

युद्धायत्योः संपरायः ....

1. संपरायः (पुं) (सांपरायः)என்றும் பாடம்

1. ஸம்பராய:(பு-அ) *1. ஆபத்து 2. போர் 3.எதிர்காலம்*

......................**पूज्यस्तु श्वशुरेऽपि च ॥** 1351

1. पूज्यः (पुं)

1. பூஜ்ய: (பு-அ) *1. மாமனார் 2. பூஜைக்குரியவர்*

पश्चादवस्थायिबलं समवायश्च संनयौ ।

1. संन्नयौ (पुं)

1. ஸந்நயௌ (பு-ஔ) 1. பின்னுள்ள சேனை
2. மொத்த ஸமூஹம்
3. தொடர்பு. 'ச' என்றதால் கொள்ளப்பட்டது

संघाते संन्निवेशे च संस्त्यायः ....

1. संस्त्यायः (पुं)

1. ஸம்ஸ்த்யாய: (பு-அ) 1. ஸமூஹம்
2. ஊரைச் சுற்றியுள்ள வெளி
3. இல்லம் 'ச'காரத்தால் பெறப்பட்டது

...................................प्रणयास्त्वमी ॥ 1352

विश्रम्भयाश्चाप्रेमाणो ....

1. प्रणयः (पुं)

1. ப்ரணய: (பு-அ) 1. விச்வாசம்
2. செவியால் கேட்குதல்
3. ப்ரேமை

...............................विरोधेऽपि समुच्छ्रयः ।

1. समुच्छ्रयः (पुं)

1. ஸமுச்ரய: (பு-அ) 1. பகைமை, வைரம்
2. உயரம் - அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

विषयो यस्य यो ज्ञातः ....

1. विषयः (पुं)

1. விஷய: (பு-அ) 1. எதனால் எது தினமும்தொடர்பு கொண்டிருக்குமோ அது
2. ஐம்புலன்களால் அறியப்படும் பொருள்
3. தேசம்-அபி சப்தத்தால்பெறப்பட்டது

निर्यासेऽपि कषायोऽस्त्री ....

1. कषायः (पुं/न)

1. கஷாய: (பு/ந-அ) 1. கஷாயம் 2. துவர்ப்பு
3. மைபூசுதல் 4. பரிமள சுகந்தம்

.... सभायां च प्रतिश्रयः ।

1. प्रतिश्रयः (पुं)

1. ப்ரதிச்ரய: (பு-அ) 1. சபை
2. இருப்பிடம்/வீடு - இது சகரத்தால் பெறப்பட்டது

प्रायो भूम्न्यन्तगमने ....

1. प्रायः (पुं)

1. ப்ராய: (பு-அ) 1. பெரும்பாலும்/உத்தேசம்
2. சாகும்வரை உண்ணாவிரதம்/ வடக்கிருத்தல்
3. ஸமாஸத்தில் உத்தரபதமாய், ஸத்ருச அர்த்தத்திற்கும் (இளையதான) பெயர்

.... मन्युर्दैन्त्ये ऋतौ क्रुदि ॥ 1354

1. मन्युः (पुं)

1. மன்யு: (பு-உ) 1. தீனமானது 2. யாகம் 3. கோபம்

रहस्योपस्थयोर्गुह्यं ....

1. गुह्यं (पुं)

1. குஹ்யம் (பு/பெ/ந-அ) 1. ரஹஸ்யம் மறைக்கத்தக்கது
குஹ்யம் (ந-அ) 2. ஆண், பெண் குறிகள்
3. ஆமை

....................सत्यं शपथतथ्ययोः।

1. सत्यं (न)

1. ஸத்யம் (ந-அ) 1. ஆணை
ஸத்ய:(பு/பெ/ந-அ) 2. உண்மை
3. யுகங்கள், உலகங்கள் (ஸத்யலோகம்) என்று சிலர்

वीर्यं बले प्रभावे च ....

1. वीर्यं (न)

1. வீர்யம் (ந-அ) 1. பலம் 2. பொருட்களின் சக்தி
3. இந்திரியம்/ரேதஸ் - சகாரத்தால் பெறப்பட்டது

..........................द्रव्यं भव्ये गुणाश्रये ॥1355

1. द्रव्यं (न)

1. த்ரவ்யம் (ந-அ) 1. நல்ல/சிறந்த பொருட்கள்
2. நற்குணமுள்ள வஸ்த்து
3. பாக்கியவான், யோக்கியவான் என்று சிலர்

धिष्ण्यं स्थाने गृहे भेऽग्नौ ....

1. धिष्ण्यं (पुं)

1. திஷ்ண்யம் (பு-அ) 1. இடம் 2. வீடு 3. நக்ஷத்திரம்

............................भाग्यं कर्म शुभाशुभम्।

1. भाग्यं (न)

1. பாக்யம் (ந-அ) *1. சுபகர்மா*

2. அசுப கர்மா

कशेरुहेम्नोर्गाङ्गेयं ....

1. गाङ्गेयं (न)

1. காங்கேயம் (பு-அ) *1. தாமரைக்கிழங்கு*

2. தங்கம்

.... विशल्या दन्तिकापि च ॥ 1356

1. विशल्या (स्त्री)

1. விசல்யா (பெ-ஆ) *1. நாகதந்திச்செடி*

2. கொம்மட்டிச்செடி. அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

वृषाकपायी श्रीगौर्योः ....

1. वृषाकपायी (स्त्री)

1. வ்ருஷாகபாயீ (பெ-ஈ) *1. லக்ஷ்மீ*

2. பார்வதி

.... अभिख्या नामशोभयोः ।

1. अभिख्या (स्त्री)

1. அபிக்யா (பெ-ஆ) *1. பெயர் 2. ஒளி/காந்தி*

आरम्भो निष्कृतिः शिक्षा पूजनं संप्रधारणम् ॥ 1357

उपायः कर्म चेष्टा च चिकित्सा च नव क्रियाः ।

1. क्रिया (स्त्री)

1. க்ரியா (பெ-ஆ) 1. உத்யோகம்/வேலை
2. ப்ராயச்சித்தம்
3. சிக்ஷா (வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்று)
4. பூஜை
5. ஆதாரம்/சான்று
6. உபாயம் (சாம, தான, பேத, தண்டம் என்ற நான்குவித உபாயம்)
7. அறிவுபூர்வமான செயல்
8. வைத்தியம்
9. செயல்

छाया सूर्यप्रिया कान्तिः प्रतिबिम्बमनातपः ॥ 1358

1. छाया (स्त्री)

1. சாயா (பெ-ஆ) 1. சூரியனின் மனைவியின் பெயர்
2. ஒளி
3. பிரதிபிம்பம்
4. நிழல்

कक्ष्या प्रकोष्ठे हर्म्यादेः काञ्च्यां मध्येभबन्धने ।

1. कक्ष्या (स्त्री)

1. கக்ஷ்யா (பெ-ஆ) 1. உப்பரிகை (அரண்மனையில் மாடி)
2. அரண்மனையின் அங்கணம்
3. அரை நூல் மாலை
4. யானை வயிற்றில் கட்டும் பட்டை

कृत्या क्रियादेवतयोस्त्रिषु भेद्ये धनादिभिः ॥ 1359

1. कृत्या (स्त्री)

1. க்ருத்யா (பெ-ஆ) 1. செய்தல் 2. தேவதா விசேஷம்
க்ருத்யா(பு/பெ/ந-அ) 3. செல்வத்தால் பேதம் செய்து நாட்டை அபகரித்தல்

जन्यः स्याज्जनवादेऽपि ....

1. जन्यः (पुं/स्त्री/न)

1. ஜந்ய: (பு-அ) 1. உலகின் அபவாதம்
ஜன்யா (பெ-ஆ) 2. யுத்தம்
ஜன்யம் (ந-அ) 3. கைப்பற்றுதல்
ஜன்ய: (பு-அ) 4. மாப்பிள்ளைதோழன்
5. மணப்பெண்ணின் தோழிகள்
6. தந்தை

.... जघन्योऽन्तेऽधर्मेऽपि च ।

1. जघन्यः (पुं/स्त्री/न)

1. ஜகன்ய: (பு-அ) 1. பின்பிறந்தவன்
*ஜகன்யா(பெ-ஆ)*2. அதமன்/மட்டமான குணம் படைத்தவன்
*ஜகன்யம் (ந-அ)*3. வால், குளம், குறி இவைகள் 'அபி' என்ற சொல்லால்பெறப்பட்டது

गर्ह्याधीनौ च वक्तव्यौ ....

1. वक्तव्यः (पुं/स्त्री/न)

1. வக்தவ்ய: (பு-அ) 1. கீழ்மகன்
*வக்தவ்யா(பெ-ஆ)*2. சொல்படி கேட்பவன்
வக்தவ்யம் (ந-அ) 3. பேசத்தக்க சொற்கள் - இது 'ச'காரத்தால் பெறப்பட்டது

.... कल्यौ सज्जनिरामयौ ॥ 1360

1. कल्यः (पुं/स्त्री/न)

1. கல்ய: (பு-அ) 1. உழைப்பால் பெற்ற பொருள்
கல்யா (பெ-ஆ)
கல்யம் (ந-அ) 2. நோயுற்றது

आत्मवाननपेतोऽर्थादर्थ्यौ.........

1. अर्थ्यः (पुं/स्त्री/न)

1. அர்த்ய: (பு-அ) 1. அறிவுள்ளவன்
அர்த்யா(பெ-ஆ) 2. பொருளை விரும்பி இடைவிடாதவன்
அர்த்யம் (ந-அ)

..........................पुण्यं तु चार्वपि ।

1. पुण्यं (न)

1. புண்யம் (ந-அ) 1. அழகியவை
2. ஸுக்ருதம் - நற்செயல்/அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

रूप्यं प्रशस्ते रूपेऽपि ....

1. रूप्यं (पुं/स्त्री/न)

1. ரூப்ய: (பு-அ) 1. அழகானது
ரூப்யா(பெ-ஆ)
ரூப்யம் (ந-அ) 2. முத்திரை போடப்பட்ட தங்கம், (அரசாங்க முத்திரை போடப்பட்ட தங்கக்காசு, வெள்ளிக்காசுகளை ரூப்யா என்று அழைத்தனர். அது இன்று வரை தொடர்கிறது)

.........................वदान्यो वल्गुवागपि ॥ 1361

1. वादान्यः (पुं/स्त्री/न)

1. வதாந்ய: (பு-அ) 1. சிறந்த சொற்களைப் பேசுபவன்
வதாந்யா (பெ-ஆ)
வதாந்யம் (ந-அ) 2. கொடையாளி/வள்ளல் இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது.

न्यायोऽपि मध्यं ....

1. मध्यः (पुं/स्त्री/न)

1. *மத்ய:* *(பு-அ)* **1.** *உசிதமானது/தகுதியானது*
மத்யா *(பெ-ஆ)*
மத்யம் *(ந-அ)*
மத்ய: *(பு-அ)* **2.** *இடுப்பு*
மத்யம் *(ந-அ)*

.... **सौम्यं तु सुन्दरे सोमदेवते ।**

1. सौम्यः (पुं/स्त्री/न)

1. *ஸௌம்ய:* *(பு-அ)* **1.** *மனங்கவர்ந்தது*
ஸௌம்யா *(பெ-ஆ)*
ஸௌம்யம் *(ந-அ)* **2.** *ஸோமனை தேவதையாகக் கொண்ட ஹவிஸ் ஸூக்தம் என்பது லிங்கபட்டீயம்*

"ய" என்ற எழுத்தில் முடியும் சொற்கள் இவை

अथ रान्तवर्गः

ர வில் முடியும் சொற்கள்

निवहावसरौ वारौ ....

1. वारः (पुं)

1. *வார:* *(பு-அ)* **1.** *ஸமூஹம்*
2. *நிலை/ அவஸரம்*

.... **संस्तरौ प्रस्तराध्वरौ** ॥ 1362

1. संस्तरः (पुं)

1. *ஸம்ஸ்தர:* *(பு-அ)* **1.** *தருப்பைப் புல்லால் செய்யப்பட்ட படுக்கை*
2. *யாகம்*

गुरू गीर्पतिपित्राद्यौ ....

1. गुरुः (पुं)

1. குரு: *(பு-உ)* **1. பிரஹஸ்பதி**

2. தகப்பனார் முதலிய பெரியோர்

3. கனமான பொருள்

.... द्वापरौ युगसंशयौ ।

1. द्वापरः (पुं)

1. த்வாபர: *(பு-அ)* **1. மூன்றாம் யுகம்**

2. சந்தேஹம்

प्रकारौ भेदसादृश्य ....

1. प्रकारः (पुं)

1. ப்ரகார: *(பு-அ)* **1. பேதம் / பிரித்தல்**

2. ஒப்புமை

.... आकाराविङ्गिताकृती ॥ 1363

1. आकारः (पुं)

1. ஆகார: *(பு-அ)* **1. ஆமோதித்தல் அல்லது நிராகரித்தலான செய்கையை குறிப்பிடும் முகக்குறிப்பு**

किंशारू धान्यशूकेषू...............

1. किंशारुः (पुं)

1. கிம்சாரு: *(பு-ஊ)* **1. தானியங்களில் காணப்படும் முள்/கூர்மை**

2. பாணம்

....मरू धन्वधराधरौ ।

1. मरुः (पुं)

1. மரு: (பு-உ) 1. நீரின்றியுள்ள நிலம்
2. பர்வதம்

अद्रयो द्रुमशैलार्काः ....

1. अद्रिः (पुं)

1. அத்ரி: (பு-இ) 1. மரம்
2. பர்வதம் - குன்று
3. சூரியன்

....................स्त्रीस्तनाब्दौ पयोधरौ ॥ 1364

1. पयोधरः (पुं)

1. பயோதர: (பு-அ) 1. பெண்களின் ஸ்தநம்/நகில்
2. மேகம்

ध्वान्तारिदानवा वृत्रा ....

1. वृत्रः (पुं)

1. வ்ருத்ர: (பு-அ) 1. இருள்
2. எதிரி
3. வ்ருத்திராசுரன்

.............................बलिहस्तांशवः कराः ।

1. कराः (पुं)

1. கரா: (பு-அ) 1. கப்பம்
2. கை
3. கிரணம்

प्रदरा भङ्गनारीरुग्बाणा ....

1. प्रदरः (पुं)

1. ப்ரதர: (பு-அ) 1. ஒடித்தல்
2. பெண்களின் உதிரப்போக்கு (பெரும்பாடு)
3. அம்பு

.... अस्राः कचा अपि ॥ 1365

1. अस्राः (पा) अस्रः (पुं)

1. அஸ்ரா: (பாடம்) அஸ்ர: (பு-அ) *1. முடி*
அஸ்ர: (ந-அ) *2. ரக்தம் 3. கண்ணீர்*

अजातशृङ्गो गौः कालेऽप्यश्मश्रुर्ना च तूबरौ ।

1. तूबरः (पुं)

1. தூபர: (பு-அ) *1. உரிய காலத்தில் கொம்பு வளராத எருது*
2. மீசை முளைக்காத ஆண் மகன்

स्वर्णेऽपि राः ....

1. राः (पुं)

1. ரா: (பு-அ) *1. தங்கம்*
2. பொருள் - இது அபி என்பதால் கொள்ளப்பட்டது

.... परिकरः पर्यङ्कपरिवारयोः ।

1. परिकरः (पुं)

1. பரிகர: (பு-அ) *1. கட்டில் 2.. பரிவாரங்கள்*

मुक्ताशुद्धौ च तारः स्यात् ....

1. तारः (पुं)

1. தார: (பு-அ) *1. குற்றமற்ற முத்துச்சிப்பி*
2. நக்ஷத்திரம்
தாரா (பெ-ஆ) *3. கருவிழி*
தார: (பு-அ) *4. பேரோசை*
தாரா (பெ-ஆ)
தாரம் (ந-அ)

.... शारो वायौ स तु त्रिषु ।

कर्बुरे ....

1. शारः (पुं)

1. சாரः (பு-அ) *1. வாயு/காற்று*
சாரா (பெ-ஆ)
சாரம் (ந-அ)

..............अथ प्रतिज्ञाजिसंविदापत्सु संगरः ॥ 1367

1. सङ्गरः (पुं)

1. ஸங்கரः (பு-அ) 1. ப்ரதிக்ஞை 2. யுத்தம்
3. உறுதியான செயல் 4. ஆபத்து

वेदभेदे गुप्तिवादे मन्त्रो ....

1. मन्त्रः (पुं)

1. மந்த்ரः (பு-அ) 1. காயத்ரி போன்ற வேதமந்திரங்கள்
2. ரஹஸ்ய ஆலோசனை

.... मित्रो रवावपि ।

1. मित्रः (पुं)

1. மித்ரः (பு-அ) 1. ஸூரியன்
மித்ரம் (ந-அ) 2. நண்பன்

मखेषुयूपखण्डेऽपि स्वरुः ....

1. स्वरुः (पुं)

1. ஸ்வருः (பு-உ) 1. யாகம் 2. பாணம்
3. யூபஸ்தம்பத்தின் துணுக்கு
4. வஜ்ராயுதம் - இது அபி என்ற
சொல்லால் பெறப்பட்டது

........................गुह्योऽप्यवस्करः ॥ 1368

1. व्यवस्करः (पुं)

1. வ்யவஸ்கர: *(பு-அ)* 1. ஆண் பெண்களின் ரஹஸ்யம்
2. மலம் - இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது
3. கழுநீர் பானையின் கீழுள்ள குழம்பு

आडम्बरस्तूर्यरवे गजेन्द्राणां च गर्जिते ।

1. आडम्बरः (पुं)

1. ஆடம்பர: *(பு-அ)* 1. வாத்தியங்களின் பேரொலி
2. யானைகளின் பிளிரல்கள்
3. பரபரப்பு

अभिहारोऽभियोगे च चौर्ये संनहनेऽपि ॥ 1369

1. अभिहारः (पुं)

1. அபிஹார: *(பு-அ)* 1. கவரவேண்டும் என்று எண்ணி ஆக்ரமித்தல்
2. திருட்டு
3. ஆயத்தப்படுத்தல்

स्याज्जङ्गमे परीवारः खड्गकोशे परिच्छदे ।

1. परीवारः (पुं)

1. பரீவார: *(பு-அ)* 1. திரிகின்ற மனிதன்
2. கத்தி உறை
3. சுற்றியுள்ள வேலைக்காரர்கள்

विष्टरो विटपी दर्भमुष्टिः पीठाद्यमासनम् ॥ 1370

1. विष्टरः (पुं)

1. விஷ்டர: *(பு-அ)* 1. மரம் 2. தர்பைக்கொத்து/ முஷ்டி
3. மனைப்பலகை போன்ற ஆஸநம்

द्वारि द्वाःस्थे प्रतीहारः प्रतीहार्यप्यनन्तरे ।

1. प्रतीहारः (पुं)

1. ப்ரதிஹார: *(பு-அ)* **1. வாசற்படி 2. வாயிற்காப்போன்**
ப்ரதிஹாரி *(பு-ந்)* வாயிற்காப்போன்
ப்ரதிஹாரிணீ *(ந-அ)* பெண் - வாயில் காப்பவள்

विपुले नकुले विष्णौ बभ्रुः स्यात् पिङ्गले त्रिषु ॥ 1371

1. बभ्रुः (पुं)

1. பப்ரு: *(பு-உ)* 1. பெரிய கீரிப்பிள்ளை
2. விஷ்ணு
பப்ரு: *(பு-உ)* 3. பச்சைவண்ணம்
(பெ-உ) ,,
(ந-அ) ,,

सारो बले स्थिरांशे च न्याय्ये क्लीबं वरे त्रिषु ।

1. सारः (पुं)

1. ஸார: *(பு-அ)* 1. பலம் 2. உறுதியானது
ஸாரம் *(ந-அ)* 3. யுகம்
ஸார: *(பு-அ)*
ஸாரா *(பெ-ஆ)* 4. சிரேஷ்டம்
ஸாரம் *(ந-அ)*

दुरोदरो द्यूतकारे पणे द्यूते दुरोदरम् ॥ 1372

1. दुरोदरः (पुं)

1. துரோதர: *(பு-அ)* 1. சூதாடுபவன்
துரோதரம் *(ந-அ)* 2. பந்தயம்
3. சூதாட்டம்

महारण्ये दुर्गपथे कान्तारं पुंनपुंसकम् ।

1. कान्तारं (पुं/न)

1. காந்தார: *(பு-அ)* 1. பெரியகாடு
காந்தாரம் *(ந-அ)*2. போகமுடியாத/கடக்கமுடியாத வழி

मत्सरोऽन्यशुभद्वेषे तद्वत्कृपणयोस्त्रिषु ॥ 1373

1. मत्सरः (पुं)

1. மத்ஸர: (பு-அ) 1. பிறர் மேன்மையடைவதைக் கண்டு சகிக்காத தன்மை/பொறாமை

மத்ஸர: (பு-அ)2. பிறர் மேன்மையடைவதைக் கண்டு சகிக்காதவன்/பொறாமையுள்ளவன்

மத்ஸரீ (பெ-ஈ)

மத்ஸரம் (ந-அ)3. கஞ்சன்

देवावृते वरः श्रेष्ठे त्रिषु क्लीबं मनाक्प्रिये ।

1. वरः (पुं/न)

1. வர: (பு-அ) 1. தேவர்களிடமிருந்து கேட்டுப்பெற்ற வரம்

வர: (பு-அ) 2. சிறிது விருப்பமானது

வரா (பெ-ஆ)

வரம் (ந-அ)

சிலர் இதை அவ்யயம் என்றுகூறுகின்றனர்

वंशाङ्कुरे करीरोऽस्त्री तरुभेदे घटे च ना ॥ 1374

1. करीरः (पुं)

1. கரீர: (பு-அ) 1. மூங்கில் முளை

(ந-அ)

கரீர: (பு-அ) 2. மரங்களின் வகை

3. குடம்

ना चमूजघने हस्तसूत्रे प्रतिसरोऽस्त्रियाम् ।

1. प्रतिसरः (पुं)

1. ப்ரதிஸர: (பு-அ) 1. சேனையின் பின்பக்கம்

ப்ரதிஸர: (பு-அ) 2. திருமணத்தின்போது கட்டும் கங்கனம்

ப்ரதிஸரம் (ந-அ)

यमानिलेन्द्रचन्द्रार्कविष्णुसिंहांशुवाजिषु ॥ 1375

शुकाहिकपिभेकेषु हरिर्ना कपिले त्रिषु ।

1. हरिः (पुं/न)

1. ஹரி: (பு-இ) 1. யமன் 2. வாயு 3. இந்திரன் 4. சந்திரன்
5. விஷ்ணு 6. சிங்கம் 7. கிரணம் 8.குதிரை
9. கிளி 10.பாம்பு 11. குரங்கு 12. தவளை

ஹரி: (பு-இ)13. பொன் நிறமுடையபொருளைக் குறிக்கும் போது

ஹரீ (பெ-ஈ)

ஹரி (ந-அ)

கபிலவர்ணம் என்பது லிங்கபட்டியம்

शर्करा कर्परांशेऽपि ....

1. शर्करा (स्त्री)

1. சர்கரா (பெ-ஆ) 1. உயரம்
2. உயரமான பூமி -
இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது
3. சர்க்கரை

.... यात्रा स्याद्यापने गतौ ॥ 1376

1. यात्रा (स्त्री)

1. யாத்ரா (பெ-ஆ) 1. உணவு உண்பது முதலியன
(சரீர யாத்ரா, ப்ராணயாத்ரா விஷய யாத்ரா முதலியன)
2. செல்லுதல்

इरा भूवाक्सुराप्सु स्यात् ....

1. इरा (स्त्री)

1. இரா (பெ-ஆ) 1. பூமி 2. வாக்கு 3. கள்

.... तन्द्री निद्राप्रमीलयोः ।

1. तन्द्री (स्त्री)

1. தந்த்ரீ (பெ-ஈ) 1. தூக்கம்
2. உடல் பற்றி அறியாதிருத்தல்

धात्री स्यादुपमतापि क्षितिरप्यामलक्यपि ॥ 1377

1. धात्री (स्त्री)

1. தாத்ரீ (பெ-ஈ) 1. பூமி, நெல்லிமரம்

क्षुद्रा व्यङ्गा नटी वेश्या सरघा कण्टकारिका ।
त्रिषु क्रूरेऽधनेऽल्पेऽपि क्षुद्रो ....

1. . क्षुद्रा (स्त्री)

1. க்ஷுத்ரா (பெ-ஆ) 1. உடல் ஊனமுற்றவன்
2. சதிராடும் பெண்
3. வேசி
4. தேன்கூடு
5. வாதநாராயணமரம்
க்ஷுத்ர: (பு-அ) 6. கொடுமையானவள்
க்ஷுத்ரா (பெ-ஆ) 7. கீழ்மகள்
க்ஷுத்ரம் (ந-அ) 8. சிறிதளவு
9. கஞ்சன் - இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது.

.... मात्रा परिच्छदे ॥ 1378

अल्पे च परिमाणे स्यान्मात्रं कात्स्न्येऽवधारणे ।

1. मात्रा (स्त्री/न)

1. மாத்ரா (பெ-ஆ) 1. பரிவாரம்
2. மிகக்கொஞ்சம். சிறிதளவு
3. அளவு

4. அக்ஷரங்களின் அளவு - குறில், நெடில் எழுத்துக்களின் அளவுகள்

மாத்ரம் *(ந-அ)* 5. அனைத்துக்கும்/சர்வம்
6. உறுதி-நிச்சயம்

आलेख्याश्चर्ययोश्चित्रं ....

1. चित्रं (न)

1. சித்ரம் *(ந-அ)* 1. ஓவியம்
2. ஆச்சரியம்

.... कलत्रं श्रोणिभार्ययोः ॥ 1379

1. कलत्रं (न)

1. கலத்ரம் *(ந-அ)* 1. இடுப்பின் கீழுள்ள பின் பகுதி (புட்டம்)
2. மனைவி

योग्यभाजनयोः पात्रं ....

1. पात्रं (न)

1. பாத்ரம் *(ந-அ)* 1. தகுதியானவன், யோக்யன்
2. உணவு உண்ணும் பாத்திரம்
3. நதிகளின் இரு கரைகளுக்கு இடயேயுள்ள பகுதி
4. நாடகங்களில்/வேடங்களில் உள்ள பாத்திரம்(an actor)

.... पत्रं वाहन पक्षयोः ।

1. पत्रं (न)

1. பத்ரம் *(ந-அ)* 1. வாஹநம்
2. இறகு
3. இலை

निदेश ग्रन्थयोःशास्त्रं ....

1. शास्त्रं (न)

1. சாஸ்த்ரம் (ந-அ) *1. ஆணை 2. வியாகரணம் முதலிய சாத்திரங்கள்*

.... शस्त्र मायुधलोहयोः ॥ 1380

1. शस्त्रं (न)

1. சஸ்த்ரம் (பு-அ) ***1. ஆயுதம் (கத்தி-கதை போன்றவை)***
2. இரும்பு

स्याज्जटांशुकयोर्नेत्रं ....

1. नेत्रं (न)

1. நேத்ரம் (ந-அ)
1. செடிகளின் வேர்
2. வெண்பட்டுச்சேலை
3. கயறு
4. கண்
5. துணி என்று சிலர்

.... क्षेत्रं पत्नीशरीरयोः।

1. . क्षेत्रं (न)

1. க்ஷேத்ரம் (ந-அ) ***1. உடல்***
2. மனைவி
3. நஞ்சைநிலம்
4. தயார்படுத்திய நிலம்

मुखाग्रे क्रोडहलयोः पोत्रं ....

1. पोत्रं (न)

1. போத்ரம் (ந-அ) *1. பன்றியின் முகம் (நிலத்தை உழுவதால், தோண்டுவதால்)*
2. ஏர்காலின் நுணி

......................गोत्रं च नाम्नि च ॥ 1381

1. गोत्रं (न)

1. கோத்ரம் (ந-அ) 1. பெயர்

2. குலம்-கோத்ரம் -'ச'காரத்தால்

3. பலம் (பெறப்பட்டது

கோத்ரः (பு-அ) 4. பர்வதம்

கோத்ரா (பெ-ஆ) 5. பூமி

6. பசுக்களின் கூட்டம்

सत्रमाच्छादने यज्ञे सदादाने वनेऽपि च ।

1. सत्रं (न)

1. ஸத்ரம் (ந-அ) 1. உடலை போர்த்தும் வஸ்திரம்

2. யாக விசேஷம் (சத்ரயாகம்)

3. இடைவிடாமல் கொடுத்தல்

4. காடு

5. டம்பம் (இது அபி என்ற தால்)

अजिरं विषये कायेऽपि ....

1. अजिरं (न)

1. அஜிரம் (ந-அ) 1. விஷயம்-சப்தாதி விஷயங்கள்

2. உடல்

3. முற்றம்/மூன்றில்- இது அபி என்றதால் பெறப்பட்டது

...............अम्बरं व्योम्नि वाससि ॥ 1382

1. अम्बरं (न)

1. அம்பரம் (ந-அ) 1. ஆகாயம்

2. வஸ்திரம்/ஆடை

चक्रं राष्ट्रेऽपि ....

1. चक्रं (न)

1. சக்ரம் (ந-அ) 1. நாடு
2. நான்குவித படைகள் - இது குறிப்பாக அபி என்ற சொல்லால் பெறப்பட்டது
3. வண்டியின் சக்கரம்
4. கிராமத்தினர் - கிராமத்தின் அனைத்துவித சமூகம்
5. குயவனின் சக்கரம்
6. ஆயுதம் - சக்ராயுதம்

சக்ர: (பு-அ) 7. சக்ரவாஹ பக்ஷி
8. அனைத்து ஸமூகத்திற்கும்

.... अक्षरं तु मोक्षेऽपि ....

1. अक्षरं (न)

1. அக்ஷரம் (ந-அ) 1. மோக்ஷம்
2. அகராதி எழுத்துக்கள் - இது அபி என்றதால்
3. பரபிர்மம்

.... क्षीरमप्सु च ।

1. क्षीरं (न)

1. க்ஷீரம் (ந-அ) 1. பால் 2. தண்ணீர்

स्वर्णेऽपि भूरिचन्द्रौ द्वौ ....

1. भूरि (पुं/स्त्री/न) 2. चन्द्रं (न/पुं)

1. பூரி (ந-இ) 1. தங்கம்
பூரி(பு/பெ/ந-இ) 2. அதிகம்

2. சந்த்ரம் *(ந-அ)* 1. தங்கம் - புல்லிங்கம் என்று சிலர்
சந்த்ர: *(பு-அ)* 2. சந்திரன் - இது அபி என்றதால் பெறப்பட்டது
3. கர்ப்பூரம்
4. காபிலம் என்ற நூல்

.... **द्वारमात्रे तु गोपुरम्** ॥ 1383

1. गोपुरम् (न)

1. கோபுரம் *(ந-அ)* 1. வாசற்படி
2. பட்டணத்தின் வாயில்படி - இது அபி என்றசொல்லால் பெறப்பட்டது
3. கோரைக் கிழங்கு

गुहादम्भौ गह्वरे द्वे ....

1. गह्वरं (न)

1. கஹ்வரம் *(ந-அ)* 1. குஹை
2. கபடம்

.... **रहोऽन्तिकमुपह्वरे ।**

1. उपह्वरं (न)

1. உபஹ்வரம் *(ந-அ)* 1. தனிமை (ஏகாந்தம்)
2. அருகில்

पुरोऽधिकमुपर्यग्राणि ....

1. अग्रं (पुं/स्त्री/न)

1. அக்ர: *(பு-அ)* 1. முன் (நுனி)
அக்ரா *(பெ-ஆ)*
அக்ரம் *(ந-அ)*
2. அதிகம்/மேலும்
3. உயரம்

அக்ர:(பு/பெ/ந) 4. முக்கியமானவன்
அக்ரம் (ந-அ) 5. பிக்ஷை-சிறப்பு வேறுபாடு

........................अण्यगारे नगरे पुरम् ॥ 1384

मन्दिरं च ....

1. . पुरम् , 2. मन्दिरं (न)

1. புரம்(ந-அ) 2. மந்திரம்(ந-அ)(இவ்விரண்டும்)1. வீடு
2. பட்டணம்

.... अथ राष्ट्रोऽस्त्री विषये स्यादुपद्रवे ।

1. राष्ट्रं (पुं/न)

1. ராஷ்ட்ரம் (பு-அ) 1. நாடு 2. உபத்ரவம் (இடையூறு)
ராஷ்ட்ரம் (ந-அ)

दरोऽस्त्रियां भये श्वभ्रे ....

1. दरः (पुं/न)

1. தர: (பு-அ) 1. பயம் 2. பள்ளம்
தரம் (ந-அ)

...................वज्रोऽस्त्री हीरके पवौ ॥ 1385

1. वज्रः (पुं/न)

1. வஜ்ர: (பு-அ) 1. வைரம் 2. வஜ்ராயுதம்
வஜ்ரம் (ந-அ)

तन्त्रं प्रधाने सिद्धान्ते सूत्रवाये परिच्छदे ।

1. तन्त्रः (पुं/न)

1. தந்த்ர: (பு-அ) 1. முக்கியமானவன் 2. சித்தாந்தநூல்
தந்த்ரம் (ந-அ) 3. நூல் சலாகை/படுகை 4. பரிவாரம்

औशीरं चामरे दण्डेप्यौशीरं शयनासने ॥ 1386

1. औशीरः (पुं/न)

***1. ஔசீர: (பு-அ)** 1. சாமரம் 2. கம்பு 3. சாமரதண்டம்*
***ஔசீரம்(ந-அ)** 4. படுக்கை 5. ஆஸனப்பலகை*

சயனம் என்பதை தூக்கம் என்று சிலர். 'அபி' என்றதால் வெட்டிவேர் சம்பந்தமான பொருட்கள் கொள்ளப்படுகிறது

पुष्करं करिहस्ताग्रे वाद्यभाण्डमुखे जले ।
व्योम्नि खड्गफले पद्मे तीर्थौषधि विशेषयोः ॥ 1387

1. पुष्करं (न)

***1. புஷ்கரம் (ந-அ)** 1. யானையின் துதிக்கை நுனி*
2. மத்தளம் போன்ற வாத்தியங்களின் முகம்
3. தண்ணீர் 4. ஆகாசம் 5. கத்தி
6. தாமரை 7. தீர்த்தவிசேஷம்
8. மருந்து விசேஷம்

अन्तरमवकाशावधिपरिधानान्तर्धिभेदतदर्थ्ये ।
छिद्रात्मीयविनाबहिरवसरमध्येऽन्तरात्मनि च ॥ 1388

1. अन्तरं (न)

***1. அந்தரம் (பு-அ)**1. இடைவெளி 2. மரியாதை*
3. உடுத்துகிற புடவை 4. வ்யவதானம்
5. சிறப்பானது 6. 'இதுதான்' என்ற பொருள்
7. ஓட்டை/துளை 8. தன் சம்பந்தமானது
9. அது தவிர என்ற பொருளில் 10.வெளி
11. சந்தர்பம் 12. மையப்பகுதி 13.பரமாத்மா
14. வேறானது. இது 'ச' என்ற சொல்லால் பெறப்பட்டது

मुस्तेऽपि पिठरं ....

1. पिठरं (न)

1. பிடரம் (ந-அ) *1. கோரைக்கிழங்கு*
2. பானை-இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது
3. மத்தின் காம்பு

...................राजकशेरुण्यपि नागरम् ।

1. नागरं (पुं/न)

1. நாகர: (பு-அ) *1. பத்ரமுஸ்தை என்ற மருந்துச்செடி*
நாகரம் (ந-அ) *2. தாமரைக்கிழங்கு*
3. சுக்கு
4. பட்டணம்

शार्वरं त्वन्धतमसे घातुके भेद्यलिङ्गकम् ॥ 1389

1. शार्वरं (न)

1. சார்வரம் (ந-அ) *1. கனவிருள்*
சார்வர: (பு-அ) *2. கொல்லும் ஸ்வபாவமுள்ளவன்*
சார்வரா (பெ-ஆ)
சார்வரம் (ந-அ)

गौरोऽरुणे सिते पीते ....

1. गौरः (पुं/स्त्री/न)

1. கௌர: (பு-அ) *1. சிவந்த பொருள்*
கௌரா (பெ-ஆ)
கௌரம் (ந-அ) *2. வெள்ளை வஸ்து*
3. பச்சை வஸ்து

.....................व्रणकार्यप्यरुष्करः ।

1. अरुष्करः (पुं/स्त्री/न)

1. அருஷ்கர: (பு-அ) 1. ரணம் செய்தல்
அருஷ்கரா(பெ-ஆ)
அருஷ்கரம் (ந-அ)
அருஷ்கர: (பு-அ) 2. சோமரஸம்-அபி என்ற சொல்லால்,
சேங்கொட்டை மரம் என்று சிலர்

जठरः कठिनेऽपि स्यात् ....

1. जठरः (पुं/स्त्री/न)

1. ஜடர: (பு-அ) 1. கடினமான வஸ்து
ஜடரா (பெ-ஆ)
ஜடரம் (ந-அ)
ஜடரம் (ந-அ) 2. வயிறு-இது - அபி என்றதால்

.... अधस्तादपि चाधरः ॥ 1390

1. अधरः (पुं/स्त्री/न)

1. அதர: (பு-அ) 1. கீழே இருக்கும் பொருள்
அதரா (பெ-ஆ)
அதரம் (ந-அ)
2. ஹீனமானவன்-இது 'அபி' என்றதால்
அதர: (பு-அ) 3. உதடு

अनाकुलेऽपि चैकाग्रे ....

1. एकाग्रः (पुं/स्त्री/न)

1. ஏகாக்ர: (பு-அ) 1. மனத்துயரில்லாதவன்
ஏகாக்ரா (பெ-ஆ)
ஏகாக்ரம் (ந-அ) 2. ஸாவ்தானமானவன்-இது அபி
என்ற சொல்லால் பெறப்பட்டது

.... व्यग्रो व्यासक्त आकुले ।

அமர. 6-12

1. व्यग्रः (पुं/स्त्री/न)

1. வ்யக்ர: *(பு-அ)* **1. ஓரிடத்தில் மனத்தை ஈடுபடுத்தியவன்**
வ்யக்ரா *(பெ-ஆ)*
வ்யக்ரம் *(ந-அ)* **2. கவலைப்படுகிறவன்**

उपर्युदीच्यश्रेष्ठेष्वप्युत्तरः स्यात् ....

1. उत्तरः (पुं/स्त्री/न)

1. உத்தர: *(பு-அ)* **1. மேலும்**
உத்தரா *(பெ-ஆ)*
உத்தரம் *(ந-அ)* **2. வடதேசம் முதலியன**
3. தலைசிறந்தவர்கள்
4. பதில்

.... अनुत्तरः ॥ 1391

एषां विपर्यये श्रेष्ठे ....

1. अनुत्तरः (पुं/स्त्री/न)

1. அநுத்தர: *(பு-அ)* **1. இணையாக இல்லாதது (குறைந்தது)**
(இரண்டாம்நிலை)
அநுத்தரா *(பெ-ஆ)*
அநுத்தரம் *(ந-அ)* **2. வடநாடு இல்லாதது**
3. சிரேஷ்டமாகாதது
4. சிரேஷ்டன்
5. பதிலில்லாதது

.... दूरानात्मोत्तमाः पराः ।

1. परः (पुं/स्त्री/न)

1. பர: *(பு-அ)* **1. தூரமானது**
2. அந்நியமானது/அது இல்லாதது
3. சிரேஷ்டமானது

स्वादुप्रियौ च मधुरौ ....

1. . मधुरः (पुं/स्त्री/न)

1. மதுர: (பு-அ) 1. இனிப்பானது
மதுரா (பெ-ஆ) 2. இஷ்டமானது
மதுரம் (ந-அ)

.... **क्रूरौ कठिननिर्दयौ** ॥ 1392

1. क्रूरः (पुं/स्त्री/न)

1. க்ரூர: (பு-அ) 1. கடினமானது
க்ரூரா (பெ-ஆ) 2. இறக்கமற்றவன்
க்ரூரம் (ந-அ)

उदारो दातृमहतो ....

1. उदारः (पुं/स्त्री/न)

1. உதார: (பு-அ) 1. தானம் செய்பவன்
உதாரா (பெ-ஆ) 2. பெரியவன்
உதாரம் (ந-அ)

.... **इतरस्त्वन्यनीचयोः ।**

1. इतरः (पुं/स्त्री/न)

1. இதர: (பு-அ) 1. அன்னியமானவன்
இதரா (பெ-ஆ) 2. நீசன்
இதரம் (ந-அ)

मन्दस्वच्छन्दयोः स्वैरं....................

1. . स्वैरं (पुं/स्त्री/न)

1. ஸ்வைரம் (பு-அ) 1. மந்தன்
ஸ்வைரா (பெ-ஆ) 2.சுதந்திரம்
ஸ்வைரம் (ந-அ)

.... **शुभ्रमुद्दीप्तशुक्लयोः** ॥ 1393

1. शुभ्रः (पुं/स्त्री/न)

1. சுப்ர: (பு-அ) 1. மிகுந்த ப்ரகாசமுடையது
சுப்ரா (பெ-ஆ)
சுப்ரம் (ந-அ) 2. வெண்மையானது

"ர" என்ற எழுத்தில் முடியும் சொற்கள் இவை

-------•-------

अथ लान्तवर्गः

ல வில் முடியும் சொற்கள்

चूडा किरीटं केशाश्च संयता मौलयस्त्रयः ।

1. मौलिः (पुं/स्त्री)

1. மௌலி: (பு-இ) 1. சிகை 2. கிரீடம்
3. முடிந்துள்ள தலைமுடி
மௌலீ (பெ-ஈ)

द्रुमप्रभेदमातङ्ग काण्डपुष्पाणि पीलवः ॥ 1394

1. पीलुः (पुं)

1. பீலு: (பு-அ) 1. காஞ்சனைச்செடி, காசருக்கை என்பது லிங்கபட்டீயம்
2. யானை 3. பாணம் 4. புஷ்பம்

कृतान्तानेहसोः कालः ....

1. . कालः (पुं)

1. கால: (பு-அ) 1. யமன் 2. காலம்

.... **चतुर्थेऽपि युगे कलिः ।**

1. कलिः (पुं)

1. கலி: (பு-இ) 1. நான்காம் யுகமான கலி
2. கலஹம்

स्यात् कुरङ्गेऽपि कमलः ....

१. कमलः (पुं/स्त्री/न)

1. கமல: (பு-அ) 1. மான்
கமலா (பெ-ஆ) 2. தாமரை, நீர்
கமலம் (ந-அ) 3. மஹாலக்ஷ்மீ

.... प्रावारेऽपि च कम्बलः ॥ 1395

1. कम्बलः (पुं)

1. கம்பல: (பு-அ) 1. உத்தரீயம்/மேல் துண்டு
2. கம்பளி-இது அபி சப்தத்தால்
3. பசுவின் கழுத்துத்தோல்/அலதாரி
4. அனைத்து விசேஷங்களுக்கும்

करोपहारयोः पुंसि बलिः प्राण्यङ्गजे स्त्रियाम् ।

1. बलिः (पुं)

1. பலி: (பு-இ) 1. கப்பம் 2. பூசை செய்ய உள்ள மணி, தட்டு முதலியவை
பலி: (பெ-இ) 2. உயிரினங்களின் அங்கங்களில் தோன்றும் உயிர்கள்
3. மஹாபலி சக்ரவர்த்தி

स्थौल्यसामर्थ्यसैन्येषु बलं ना काकसीरिणोः ॥1396

1. बलं (पुं/न)

1. பலம் (ந-அ) 1. வலிமை 2. ஸாமர்த்தியம்
3. சேனை/படை
பல: (பு-அ) 4. காக்கை 5. பலராமன்

वातूलः पुंसि वात्यायामपि वातासहे त्रिषु ।

1. वातूलः (पुं/स्त्री/न)

1. வாதூல: (பு-அ) 1. வாயுக்கள்/வாயு ஸமூஹம்
வாதூல: (பு/பெ/ந)2. காற்றை சகித்துக்கொள்பவன்
காற்றை சகிக்காதவன் என்று சிலர்
3. வாதூலாகமம்,
4. உன்மத்தம்- இது அபி என்ற
சொல்லால் பெறப்பட்டது

भेद्यलिङ्गः शठे व्यालः पुंसि श्वापदसर्पयोः ॥ 1397

1. व्यालः (पुं/स्त्री/न)

1. வ்யால: (பு-அ) 1. துர்ஜனன் 2. புலி 3. பாம்பு
வ்யாலா (பெ-ஆ)
வ்யாலம் (ந-அ)

मलोऽस्त्री पापविट्किट्टान्यः ....

1.. मलः (पुं/न)

1. மல: (பு-அ) 1. பாபம் 2. விட்டை
மலம் (ந-அ)
3. வியர்வை - சுக்லம் போன்ற
உடலில் தோன்றும் அழுக்கு
4. சிட்டக்கல்

.... अस्त्री शूलं रुगायुधम् ।

1. शूलं (पुं/न)

1. சூல: (பு-அ) 1. சூலை/வயிற்றுவலி
சூலம் (ந-அ) 2. சூலாயுதம்

शङ्कावपि द्वयोः कीलः ....

1. कीलः (पुं/स्त्री)

1. கீல: *(பு-அ)* *1. ஆணி 2. அக்னி ஜ்வாலை இது அபி என்றதால் பெறப்பட்டது*

கீலா *(பெ-ஆ) 1. முழங்கை*

.... पालिः स्त्र्यश्र्यङ्कपङ्क्तिषु ॥ 1398

1.पालिः (स्त्री)

1. பாலி: *(பெ-இ) 1. கரைகள் 2. அடையாளம் 3. பிரதேசம் 4. மீசையுள்ள பெண் 5. காதோலை*

कलाशिल्पे कालभेदेऽपि ....

1. कला (पुं/स्त्री/न)

1. கலா *(பு-ஆ)* *1. சிற்பம் சித்திரம் அறிதல்*
2. 540 நிமிஷமுடைய காலம்
3. சந்திரனின் பதினான்காம் பாகம்
4. வட்டி

கலா *(பெ-ஆ)* *1. கணக்கு வைத்தல்*

கலா *(பு/பெ/ந)* *1. ஜீரணமானது*

...............................आलीख्यावली अपि।

1. आलिः (स्त्री)

1. ஆலி: *(பெ-இ)* *1. தோழி 2. பங்தி/வரிசை*
2. கட்டி - இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

अब्ध्यम्बुविकृतौ वेला कलामर्यादयोरपि ॥ 1399

1. वेला (स्त्री)

1. வேலா (பெ-ஆ) 1. சமுத்திரம் பொங்குதல்
2. ஒரு காரியம் செய்ய வேண்டிய தக்கதருணம்
3. மரியாதை
4. கடற்கரை-அபி என்ற சொல்லால் பெறப்பட்டது.
5. அரசனின் விருந்து
6. அநாயசமரணம்/எதிர்பாராத இயற்கை மரணம்

बहुलाः कृत्तिका गावो बहुलोऽग्नौ शितौ त्रिषु ।

1. बहुलाः (स्त्री)

1. பஹுலா: (பெ-ஆ) 1. கார்த்திகை நக்ஷத்திரம்
(பெ-ஆ) 2. பன்மை
(பெ-ஆ) 3. பசுக்கள்
,, 4. ஏலக்காய்
பஹுலா:(பு/பெ/ந) 5. கறும்பு - வெல்லம் முதலியன
பஹுல: (பு-அ) 6. அக்னி
7. கிருஷ்ணபக்ஷம்/தேய்பிறை

लीला विलासक्रिययोः ....

1. लीला (स्त्री)

1. லீலா (பெ-ஆ) 1. பெண்களிடம் கலவித்தொழில்கள்
2. செயல்

.... उपला शर्करा अपि ॥ 1400

1. उपला (स्त्री)

1. உபலா (பெ-ஆ) 1. பருக்கைக் கல் - நிலம்
உபல: (பு-அ) 2. ரத்னம் - இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

शोणितेऽम्भसि कीलालं ....

1. कीलालं (न)

1. கீலாலம் (ந-அ) 1. ரக்தம் 2. ஜலம்

.... मूलमाद्ये शिफाभयोः ।

1. मूलं (न)

1. மூலம் (ந-அ) 1. முதல்/தொடக்கம்
2. விழுது
3. மூல நக்ஷத்திரம்

जालं समूह आनायो गवाक्षक्षारकावपि ॥ 1401

1. जालं (न/स्त्री)

1. ஜாலம் (ந-அ) 1. சமூஹம் 2. வலை 3. ஜன்னல்
4. பூவின்மொட்டு 5. டம்பம்
ஜாலீ (பெ-ஈ) 1. புடலஞ்செடி

शीलं स्वभावे सद्वृत्ते ....

1. शीलं (न)

1. சீலம் (ந-அ) 1. ஸ்வபாவம்/இயல்பு 2. நல்ல நடத்தை

.... सस्ये हेतुकृते फलम् ।

1. फलम् (न)

1. பலம் (ந-அ) 1. அறுவடை போன்றவை 2. பயன்
3. அம்பின் நுனி

छर्दिर्नेत्ररुजोः क्लीबं समूहे पटलं न ना ॥ 1402

1. पटलं (पुं/न)

1. படலம் (ந-அ) 1. வீட்டுக்கூரை 2. கண்ணோய்
படல: (ந-அ) 1. சமூஹம்
(பு-அ)

अधः स्वरूपयोरस्त्री तलं ....

1. तलं (पुं/न)

1. தலம் *(பு-அ/ந-அ)* **1. கீழ் 2. ஸ்வரூபம் 3. வில்நுனி 4. உள்ளங்கை**

........................स्याच्चामिषे पलम् ।

1.पलम् (न)

1. பலம் *(ந-அ)* 1. மாமிசம்
2. எடை(320 குந்துமணி எடைகொண்டது)

और्वानलेऽपि पातालं ....

1.. पातालं (न)

1. பாதாலம் *(ந-அ)* 1. வடவாக்னி (கடலில் உள்ள அக்னி)
2. நாகலோகம் - இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

.......................चेलं वस्त्रेऽधमे त्रिषु ॥1403

1. चेलं (न)

1. சேலம் *(ந-அ)* 1. ஆடை
சேலம் *(பு/பெ/ந-ஆ)* 2. அதமமானது/கீழானது

कुकूलं शङ्कुभिः कीर्णे श्वभ्रे ना तु तुषानले ।

1. कुकूलं (न/पुं/)

1. குகூலம் *(ந-அ)* 1. எதிரிப் படைகள் கோட்டையை அணுகமுடியாதபடி கோட்டை அருகில் முளைகள் நாட்டிய பள்ளம் (இது அகழி அல்ல)
குகூல: *(பு-அ)* 2. உமியில் உண்டாக்கிய தணல்

निर्णीते केवलमिति त्रिलिङ्गं त्वेककृत्स्नयोः ॥1404

1. केवलं (न)

1. கேவலம் (ந-அ) 1. நிர்ணயிக்கப்பட்டது மட்டும்
கேவல: (பு/பெ/ந) 1. ஒன்றுக்கு மேற்பட்டவை

पर्याप्तिक्षेमपुण्येषु कुशलं शिक्षिते त्रिषु ।

1.. कुशलं (न)

1. குசலம் (ந-அ) 1. சாமர்த்தியம் 2. சுபம் 3. புண்யம்
குசல: (பு-அ) 1. சிக்ஷிக்கப்பட்டது

प्रवालमङ्कुरेप्यस्त्री ....

1. प्रवालः (पुं/न)

1. ப்ரவால: (பு-அ) 1. முளைத்துவரும் அங்குரம்/துளிர்
2. பவளம் 3. வீணையின் தண்டம்

.....................त्रिषु स्थूलं जडेऽपि च ॥ 1405

1. स्थूलं (पुं/स्त्री/न)

1. ஸ்தூல: (பு-அ) 1. மந்தபுத்திகாரன்
ஸ்தூலா (பெ-ஆ)
ஸ்தூலம் (ந-அ) 2. உடல்பெருத்தவன்

करालो दन्दुरे तुङ्गे ....

1.. करालः (पुं/स्त्री/न)

1. கரால: (பு-அ) 1. மேடுபள்ளம்
கராலா (பெ-ஆ) 2. மேட்டுப்பல்லுடையவன்-
என்று சிலர்
கராலம் (ந-அ) 3. உயரமானது

......................चारौ दक्षे च पेशलः ।

1. पेशलः (पुं/स्त्री/न)

1. பேசல: (பு-அ) 1. மனக்கவர்ச்சியளிப்பது
பேசலா (பெ-ஆ)
பேசலம் (ந-அ) 2. தெரிந்தவன்
3. கோவில் - அபி என்ற சொல்லால்
4. உலக்கை பெறப்பட்டது

मूर्खेऽर्भकेऽपि बालः स्यात् ....

1. बालः (पुं/स्त्री/न)

1. பால: (பு-அ) 1. முட்டாள் 2. சிறுவன்
பாலா (பெ-ஆ)
பாலம் (ந-அ)

பால: (பு-அ) 3. வால் 4. கேசம்
பாலம் (ந-அ) 5. சிறியவேர்

..........................लोलश्चलसतृष्णयोः ॥1406

1. लोलः (पुं/स्त्री/न)

1. லோல: (பு-அ) 1. அசைதல்
லோலா (பெ-ஆ) 2. ஆசையுடையவன்
லோலம் (ந-அ)

"ல" என்ற எழுத்தில் முடியும் சொற்கள் இவை

--------•--------

अथ वान्तवर्गः

வ வில் முடியும் சொற்கள்

दवदावौ वनारण्यवह्नी............

1.. दवः (पुं) २. दावः (पुं)

1. தவ: (பு-அ) 1. காடு, காட்டுத்தீ
தாவ: (பு-அ) 2. ,, ,,

.... जन्महरौ भवौ ।

1. भवः (पुं)

1. பவ: (பு-அ) *1. பிறத்தல் 2. சிவன்*
3. சம்ஸாரமாகிய பிரபஞ்சம்

मन्त्री सहायः सचिवौ ....

1. सचिवः (पुं)

1. ஸசிவ: (பு-அ) *1. மந்திரி 2. உதவியாளர்*

.... पतिशाखिनरा धवाः ॥1407

1. धवः (पुं)

1. தவ: (பு-அ) *1. கணவன் 2. ஆளுகின்ற அரசன்*
3. மரம் 4. மனிதன்

अवयः शैलमेषार्का ....

1. अविः (पुं)

1. அவி: (பு-இ) *1. மலை 2. ஆடு 3. சூரியன்*

.... आज्ञाह्वानाध्वरा हवाः ।

1. हवः (पुं)

1. ஹவ: (பு-அ) *1. ஆணை 2. அழைத்தல் 3. யாகம்*

भावः सत्तास्वभावाभिप्रायचेष्टात्मजन्मसु । 1408

1. भावः (पुं)

1. பாவ: (பு-அ) *1. பொருட்களை உருவாக்குதல்*
(விளைவித்தல் மற்றும் பிற)
2. இயல்பு 3. கருத்து/அபிப்பிராயம்
4. செயல் 5. ஆத்மா 6. பிறப்பு
7. உயிர்கள் என்று சிலர்

स्यादुत्पादे फले पुष्पे प्रसवो गर्भमोचने ।

1.. प्रसवः (पुं)

1. ப்ரஸவ: (பு-அ) 1. பிறத்தல் 2. பயன் 3. மலர் 4. பிரஸவம்

अविश्वासेऽपह्नवेऽपि निकृतावपि निह्नवः ॥ 1409

1. निह्निवः (पुं)

1. நிஹ்நவ: (பு-அ) 1. நம்பிக்கையற்றது 2. மறைத்தல் 3. திரஸ்காரம் செய்தல்/விலக்குதல் 4. கபடம்-இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

उत्सेकामर्षयोरिच्छाप्रसवे मह उत्सवः ।

1.उत्सवः (पुं)

1. உத்ஸவ: (பு-அ) 1. உப்புதல் 2. கோபம் 3. ஆசை தோன்றுதல் 4. பண்டிகை

अनुभावः प्रभावे च सतां च मतिनिश्चये ॥ 1410

1.. अनुभावः (पुं)

1. அநுபாவ: (பு-அ)1. சிறப்பு 2.பெரியவர்களின் உறுதியான எண்ணம் 3. சாத்விகச் செயல்கள் - இது 'ச' என்ற சொல்லால் பெறப்பட்டது

स्याज्जन्महेतुः प्रभवः स्थानं चाद्योपलब्धये ।

1. प्रभवः (पुं)

1. ப்ரபவ: (பு-அ)1. பிறப்புக்குக் காரணம் 2.காரணமானது 3. முதலில் அறிதல் 4. ஸ்தானமானது 5. ப்ரபவ என்ற ஆண்டு அல்லது ப்ரபவ முதலிய 60 ஆண்டுகள்.

शूद्रायां विप्रतनये शस्त्रे पारशवो मतः ॥ 1411

1. पारशवः (पुं)

1. பாரசவ: *(பு-அ)* **1. சூத்ர பெண்ணிடம் பிராமணனுக்குப் பிறந்தவன்**

2. ஆயுதம்

ध्रुवो भभेदे क्लीबे तु निश्चिते शाश्वते त्रिषु ।

1.. ध्रुवः (पुं/स्त्री/न)

1. த்ருவ: *(பு-அ)* **1. த்ருவ நட்சத்திரம்**

த்ருவம் *(ந-அ)* **2. உறுதி, நிச்சயம்**

த்ருவ: *(பு-அ)* **3. நித்தியமானது**

த்ருவா *(பெ-ஆ)* ,,

स्वो ज्ञातावात्मनि स्वं त्रिष्वात्मीये स्वोऽस्त्रियां धने ॥ 1412

1.. स्वः (पुं/स्त्री/न)

1. ஸ்வ: *(பு-அ)* **1. க்ஞாதி - தாயாதி - பங்காளி**

ஸ்வ: *(ந-அ)* **தான் (என்று தன்னைக் குறித்தல்)**

ஸ்வ: *(பு-அ)* **தன்னுடையது**

ஸ்வா *(பெ-ஆ)* ,,

ஸ்வம் *(ந-அ)* ,,

ஸ்வ: *(பு-அ)* **2. செல்வம்**

ஸ்வம் *(ந-அ)*

स्त्रीकटीवस्त्रबन्धेऽपि नीवी परिपणेऽपि च ।

1.नीवी (स्त्री)

1. நீவீ *(பெ-ஈ)* **1. பெண்கள் இடுப்பில் கட்டும் புடவையின் முடிச்சு**

2. முதலாவதாக உள்ள பணம்/மூலதனம்

3. பந்தயத்தில் கட்டிய பொருள்

शिवा गौरीफेरवयोः ....

1. शिवा (पुं/स्त्री/न)

***1. சிவா** (பெ-ஆ) 1. கௌரீதேவீ 2. நரி*
3. கடுக்காய்ச்செடி 4. நெல்லிச்செடி

***சிவ:** (பு-அ) 1. சிவபெருமான்*
***சிவம்** (ந-அ) 1. சுபம்*

.... द्वन्द्वं कलहयुग्मयोः ॥ 1413

1. द्वन्द्वं (न)

***1. த்வந்தம்** (ந-அ) 1. போர் 2. இரண்டு எண்ணிக்கை*
3. பெண்குறி

द्रव्यासुव्यवसायेषु सत्त्वमस्त्री तु जन्तुषु ।

1. सत्त्वं (न/पुं)

***1. ஸத்வம்** (ந-அ) 1. பொருட்கள் 2. உயிர் 3. உத்யோகம்*
***ஸத்வ:** (பு-அ) 4. உயிரினங்கள்*
***ஸத்வம்** (ந-அ)*

क्लीबं नपुंसके षण्ढे वाच्यलिङ्गमविक्रमे ॥ 1414

1. क्लीबं (न)

***1. க்லீபம்** (ந-அ) 1. ஆண்மையற்றவன், அலி*

***க்லீப:** (பு-அ) 2. மீசையில்லாதவன்*

***க்லீபா** (பெ-ஆ)*

***க்லீபம்** (ந-அ) 3. பராக்ரமமில்லாதவன்*

"வ" என்ற எழுத்தில் முடியும் சொற்கள் இவை

-------S-------

अथ शान्तवर्गः

ச வில் முடியும் சொற்கள்

द्वौ विशौ वैश्यमनुजौ ....

1.विट् (श् -पुं)

1. விட் (பு-ச்) *1. வைச்யன் 2. மனிதன்*

.... द्वौ चराभिमरौ स्पशौ ।

1.. स्पशः (पुं)

1. ஸ்பச: (பு-அ) *1. ஒற்றன் 2. யுத்தம்*
3. புலி, சிங்கம் போன்றவற்றுடன் சண்டை போடுபவன்

द्वौ राशी पुञ्जमेषाद्यौ ....

1. राशिः (पुं)

1. ராசி: (பு-இ) *1. ஸமூஹம்*
2. மேஷம் முதலிய 12 ராசிகள்

.... द्वौ वंशौ कुलमस्करौ ॥ 1415

1. वंशः (पुं)

1. வம்ச: (பு-அ) *1. குலம் 2. மூங்கில்*

रहः प्रकाशौ वीकाशौ ....

1.. वीकाशः (पुं)

1. வீகாச: (பு-அ) *1. தனிமையான இடம்*
2. தெளிவான பொருள்

.... निर्वेशो भृतिभोगयोः ।

1. निर्वेशः (पुं)

1. நிர்வேச: (பு-அ) 1. கூலி 2. போகம்

कृतान्ते पुंसि कीनाशः क्षुद्रकर्षकयोस्त्रिषु ॥ 1416

1. कृतान्तः (पुं)

1. க்ருதாந்த: (பு-அ) 1. யமன்

க்ருதாந்த: (பு-அ) 2. தரித்ரன்

க்ருதாந்தா (பெ-ஆ) 3. உழுகின்றவன்

க்ருதாந்தம் (ந-அ)

पदे लक्ष्ये निमित्तेऽपदेशः ....

1. अपदेशः (पुं)

1. அபதேச: (பு-அ) 1. ஸ்தானம் 2. காரணம் 3. நிமித்தம் 4. புகழ்/பிரசித்தி

.... स्यात् कुशमप्सु च ।

1. कुशम् (न)

1. குசம் (ந-அ) 1. தண்ணீர்

குச: (பு-அ) தர்ப்பை

குசம் (ந-அ) ,,

दशावस्थानेकविधाऽपि ....

1. दशा (स्त्री)

1. தசா (பெ-ஆ) 1. குழந்தை, பால, வாலிப, முதுமை போன்ற பருவங்கள்

2. ஆடையின் நுனி அல்லது புடவையின் நுனி - இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

.... आशा तृष्णापि चायता ॥ 1417

1. आशा (स्त्री)

1. ஆசா (பெ-ஆ) 1. அதிகமான விருப்பம்/பேராசை
2. திசை - இது அபி என்ற சொல்லால் பெறப்பட்டது

वशा स्त्री करिणी च स्याद् ....

1. वशा (स्त्री)

1. வசா (பெ-ஆ) 1. பெண் 2. பெண்யானை
3. மலட்டுப்பசு

வச: (பு-அ)
வசா (பெ-ஆ) 4. அதிகமானவை
வச (ந-அ) ,,

.... दृग् ज्ञाने ज्ञातरि त्रिषु ।

1. दृक् (पुं/स्त्री/न)

1. த்ருக் (பெ-ச்) 1. ஞானம்/அறிவு
த்ருக் (பு/பெ-ந) 2. அறிவாளி 3. பார்ப்பவன்
த்ருக் (பெ-ச்) 4. கண் பார்வை

स्यात् कर्कशः साहसिकः कठोरामसृणावपि ॥ 1418

1. कर्कशः (पुं/स्त्री/न)

1. கர்க்கச: (பு-அ) 1. கெட்டிகாரன்/திறமையுள்ளவன்
கர்க்கசா(பெ-ஆ)2. கடினமானது
கர்க்கச (ந-அ) 3. தயை இல்லாதவன்/இறக்கமற்றவன்
இது அபி என்றதால் பெறப்பட்டது

प्रकाशोऽतिप्रसिद्धेऽपि ....

1. प्रकाशः (पुं/स्त्री/न)

1. ப்ரகாச: (பு-அ) 1. புகழ் பெற்றவன்
ப்ரகாசா (பெ-ஆ)
ப்ரகாசம் (ந-அ)
ப்ரகாச: (பு-அ) 2. வெய்யில்

.... शिशावज्ञे च बालिशः ।

१. बालिशः (स्त्री)

1. பாலிச: (பெ-அ)1. குழந்தை 2. அறிவற்றவன்
3. முட்டாள்-இது அபி சொல்லால் பெறப்பட்டது

कोशोऽस्त्री कुड्मले खड्गपिधानेऽर्थौघदिव्ययोः ॥ 1419

1. कोशः (पुं/न)

1. கோச: (பு-அ) 1. அரும்பு 2. கத்திஉறை
3. செல்வப்பெருக்கு
கோசம் (ந-அ) 4. திவ்ய ப்ரமாணபேதம் 5. புத்தகம்

"ச" என்ற எழுத்தில் முடியும் சொற்கள் இவை

-------❀-------

अथ षान्तवर्गः

ஷ வில் முடியும் சொற்கள்

सुरमत्स्यावनिमिषौ ....

1. अनिमिषः (पुं)

1. அநிமிஷ: (பு-அ) 1. தேவர்கள் 2. மீன்கள்

.... पुरुषावात्ममानवौ ।

1. पुरुषः (पुं)

1. புருஷ: (பு-அ) 1. ஆத்மா 2. மனிதன்

काकमत्स्यात्खगौ ध्वाङ्क्षौ ....

1. ध्वाङ्क्षः (पुं)

1. த்வாங்க்ஷ: (பு-அ) 1. காக்கை 2. நாரை (மீன் உண்ணும்பறவை)

.... कक्षौ तु तृणवीरुधौ ॥ 1420

1. कक्षः (पुं)

1. கக்ஷ: (பு-அ) 1. புல் 2. கொடி மண்டிய புதர் 3. கக்கம் 4. உலர்ந்த காடு 5. பாபம் இம்மூன்றும் (3-5) சகாரத்தால் பெறப்பட்டன.

अभीषुः प्रग्रहे रश्मौ ....

1. अभीषुः (पुं)

1. அபீஷு: (பு-அ) 1. கயிறு 2. கிரணம்

.... प्रैषः प्रेषणमर्दने ।

1. प्रैषः (पुं)

1. ப்ரைஷ: (பு-அ) 1. அனுப்புதல் 2. பீடித்தல்

पक्षः सहायेऽपि........................

1. पक्षः (पुं)

1. பக்ஷ: (பு-அ) 1. உதவி 2. சுக்ல - க்ருஷ்ண பக்ஷங்கள் 3. இறகு 4. பக்கம் - இம்மூன்றும்(2-4) அபி என்றதால் பெறப்பட்டது.

.... उष्णीषं शिरोवेष्टकिरीटयोः ॥ 1421

1. उष्णीषः (पुं)

1. உஷ்ணீஷ: (பு-அ) 1. தலையைச் சுற்றி கட்டும் முண்டாசு முதலியன 2. கிரீடம்

शुक्रले मूषिके श्रेष्ठे सुकृते वृषभे वृषः ।

1. वृषः (पुं)

1. வ்ருஷ: (பு-அ) *1. வலிமையுள்ளவன் 2. எலி*
3. சிறந்தவன் 4. புண்ணியம்
5. காளைமாடு

द्यूतेऽक्षे शारिफलकेऽप्याकर्षो ....

1. आकर्षः (पुं)

1. ஆகர்ஷ: (பு-அ) *1. சூதாட்டம் 2. பகடைக்காய்கள்*
3. சூதாடும் பலகை 4. பொருள்
நாடு முதலியன, கவர்தல்-இது அபி
என்ற சொல்லால்பெறப்பட்டது

.... **अथाक्षमिन्द्रिये ॥** 1422

ना द्यूताङ्गे कर्षचक्रे व्यवहारे कलिद्रुमे ।

1. अक्षं (न/पुं)

1. அக்ஷம் (ந-அ) *1. இந்திரியம்*
அக்ஷ: (பு-அ) *2. பாய்ச்சிகைகள் 3. 80 குந்துமணியுள்ள*
எடையுள்ள பொருள்
4.வண்டியின் உள்வாய் 5. வ்யவஹாரம்
6. பனைமரம்

कर्षूर्वार्ता करीषाग्निः कर्षूः कुल्याभिधायिनी ॥ 1423

1. कर्षूः (पुं)

1. கர்ஷு: (பு-ஊ) *1. விவசாயம் 2. விராட்டி நெருப்பு*
கர்ஷு:(பெ-ஊ) *3. நதி*

पुंभावे तत्क्रियायां च पौरुषं ....

1. पौरुषं (न)

1. பௌருஷம் (ந-அ) *1. ஆண்மை 2. ஆண் இடும் வேலை உத்திரவு*
3. மனிதனின் கை தூக்கிய உயரம் (ஒரு ஆள் ஆழம் என்பது வழக்கு)

.... विषमप्सु च ।

1. विषं (न)

1. விஷம் (ந-அ) *1. தண்ணீர் 2. விஷம் - இது 'ச' காரத்தால் பெறப்பட்டது*

उपदानेऽप्यामिषं स्याद् ....

1. आमिषं (न)

1. ஆமிஷம் (ந-அ) *1. கப்பம் 2. மாம்சம் - இது 'அபி' என்ற சொல்லால் பெறப்பட்டது*

.... अपराधेऽपि किल्बिषम् ॥ 1424

1. किल्बिषम् (न)

1. கில்பிஷம் (ந-அ) *1. அபராதம் 2. பாபம் - இது 'அபி' என்றதால் பெறப்பட்டது*

स्याद् वृष्टौ लोकधात्र्यंशे वत्सरे वर्षमस्त्रियाम् ।

1. वर्ष (पुं/न)

1. வர்ஷ: (பு-அ) *1. மழை 2. உலகம் 3. பாரத வர்ஷங்கள், பூமியின் கண்டங்கள் (தற்போது வழக்கிலுள்ள 5 கண்டங்கள் அல்ல)*
4. ஆண்டுகள்

प्रेक्षा नृत्येक्षणं प्रज्ञा ....

1. प्रेक्षा (स्त्री)

1. ப்ரேக்ஷா (பெ-ஆ) 1. நாட்டியம் 2. காணுதல் 3. புத்தி

......................**भिक्षा सेवार्थिना भृतिः** ॥ 1425

1. भिक्षा (स्त्री)

1. பிக்ஷா(பெ-ஆ)1.வணங்குதல் 2. கேட்டல்(யாசித்தல்) 3. கூலி

त्विट् शोभापि ....

1. त्विट् (स्त्री)

1. த்விட் (பெ-ஷ்) 1. காந்தி 2. அழகு

..................**त्रिषु परे** ....

இனிவரும் சொற்கள் மூன்று லிங்கங்களிலும் வரும்

..........................**न्यक्षं कात्स्न्यनिकृष्टयोः** ।

1. न्यक्षं (पुं/स्त्री/न)

1. ந்யக்ஷ: (பு-அ) 1. மெல்லுதல் (அனைத்துக்கும்)
ந்யக்ஷா (பெ-ஆ)
ந்யக்ஷம் (ந-அ) 2. கீழ்மகன் - அதமன்

प्रत्यक्षेऽधिकृतेऽध्यक्षो................

1. अध्यक्षः (पुं/स्त्री/न)

1. அத்யக்ஷ: (பு-அ) 1. நேரில் கண்டு அறிதல்
அத்யக்ஷீ (பெ-ஈ) 2. தலைவன்
அத்யக்ஷம் (ந-அ)

......................**रूक्षस्त्वप्रेमण्य चिक्कणे** ॥ 1426

1. रूक्षः (पुं/स्त्री/न)

1. ரூக்ஷ: (பு-அ) *1. பிரியமற்றவன் 2. மெல்லியதானது*
ரூக்ஷா *(பெ-ஆ)*
ரூக்ஷம் *(ந-அ)*

"ஷ" என்ற எழுத்தில் முடியும் சொற்கள் இவை

-------S-------

अथ सान्तवर्गः

ஸ வில் முடியும் சொற்கள்

रविश्वेतच्छदौ हंसौ ....

1. हंसः (पुं)

1. ஹம்ஸ: (பு-அ)*1. சூர்யன் 2. ஹம்ஸம்/அன்னப்பறவை*
3. கொடையுள்ள மன்னன் 4 . விஷ்ணு
5. அந்தராத்மா 6. சினமற்றவன்
7. உத்தமமான சன்யாஸி
8. (உத்தரபதமானபோது) சிறந்தவன்

.... **सूर्यवह्नी विभावसू ।**

1. विभावसूः (पुं)

1. விபாவஸு: (பு-ஊ) *1. சூரியன் 2. அக்னி*

वत्सौ तर्णकवर्षौ द्वौ ....

1. वत्सः (पुं)

1. வத்ஸ: (பு-அ) *1. கன்றுக்குட்டி 2. ஆண்டு*

.... **सारङ्गाश्च दिवौकसः** ॥ 1427

1. दिवौकसः (पुं)

1. திவௌகஸ: (பு-ஸ்) *1. சாதகப்பறவை 2. தேவர்கள்*
2. பக்ஷி (பறவை) 2-3 ம்
சகாரத்தால் கொள்ளப்பட்டன

शृङ्गारादौ विषे वीर्ये गुणे रागे द्रवे रसः ।

அமர. 6-15

1. रसः (पुं)

***1. ரஸ: (பு-அ)* 1. சிருங்காரம் முதலிய சுவைகள்**

2. விஷம் மற்றும் நீர் 3. வலிமை, பாதரஸம்

4. ஆர்த்ரம், புளித்த தண்ணீர்

पुंस्युत्तंसावतंसौ द्वौ कर्णपूरे च शेखरे ॥ 1428

1. उत्तंसः (पुं/न) 2. अवतंसः (पुं/न)

***1. உத்தம்ஸ: (பு-அ)* 1. காதோலை முதலிய காதணிகள்**

2. கிரீடம் முதலிய தலையணிகள்

உத்தம்ஸம் (ந-அ)

2. அவதம்ஸ: (பு-அ)

அவதம்ஸம் (ந-அ) ,, ,,

देवभेदेऽनले रश्मौ वसू रत्ने धने वसु ।

1. वसुः (पुं/न)

***1. வஸு: (பு-உ)* 1. அஷ்ட வஸுக்கள் 2. அக்னி 3. கிரணம்**

***வஸு (ந-உ)* 4. ரத்தினம் 5. செல்வம்**

विष्णौ च वेधाः ....

1. वेधाः (पुं)

***1. வேதா: (பு-ஸ்)* 1. விஷ்ணு 2. ப்ரும்மா 3. வித்வான்**

***(2-3)* ஆகியவை 'ச' என்பதால்**

பெறப்பட்டன.

.... स्त्री त्वाशीर्हीताशंसाहिदंष्ट्रयोः ॥ 1429

1. आशीः (स्त्री)

***1. ஆசி: (பெ-ஸ்)* 1. இதமான பொருள் வேண்டும் என்று**

கூறுதல்

2. பாம்பின் விஷப்பல்

लालसे प्रार्थनौत्सुक्ये ....

1. लालसः (स्त्री/पुं)

1. லாலஸ: (பு-அ) 1. வேண்டுதல்/பிரார்த்தனை
லாலஸா (பெ-ஆ) 2. விரும்பியது எப்போது கிடைக்குமென்ற எதிர்பார்ப்பு
லாலஸ: (பு-அ) 3. எதிர்பார்த்திருப்பவன்
லாலஸா (பெ-ஆ)
லாலஸ் (ந-ஸ்)

.........................हिंसा चौर्यादिकर्म च ।

1. हिंसा (स्त्री)

1. ஹிம்ஸா (பெ-ஆ) 1. திருட்டு 2. அடித்தல் துன்புறுத்துதல் இது சகாரத்தால் பெறப்பட்டது

प्रसूरस्वापि ....

1. प्रसूः (स्त्री)

1. ப்ரஸூ: (பெ-ஊ) 1. பெண்குதிரை 2. பெற்றதாய்

.... भूद्यावौ रोदस्यौ रोदसी च ते ॥ 1430

1. रोदसी (स्त्री) 2. रोदः (न)

1. ரோதஸீ (பெ-ஈ) 1. பூமி 2. ஆகாயம்
ரோத: (ந-ஸ்) ,, ,,

ज्वालाभासोर्न पुंस्यर्चि ....

1. अर्चिः (स्त्री/न)

1. அர்ச்சி: (பெ-ஸ்) 1. எரிச்சல் 2. காந்தி
அர்ச்சி: (ந-ஸ்)

.... ज्योतिर्भद्योतदृष्टिषु ।

1. ज्योतिः (न)

1. ஜ்யோதி (ந-ஸ்) 1. நக்ஷத்திரம் 2. தேஜஸ் 3. பார்வை
ஜ்யோதி: (பு-ஸ்) 4. ஸூர்யன் 5. அக்னி

पापापराधयोरागः ....

1. आग (न)

1. ஆக (ந-ஸ்) 1. பாபம் 2. அபராதம்

.....................खगबाल्यादिनोर्वयः ॥ 1431

1. वय (न)

1. வய (ந-ஸ்) 1. பறவை
2. பால-வாலிபம் பேன்ற வயது

तेजः पुरीषयोर्वर्चो ....

1. वर्च (न)

1. வர்ச (ந-ஸ்) 1. தேஜஸ் 2. மலம்

.....................महस्तूत्सवतेजसोः ।

1. मह (न)

1. மஹ (ந-ஸ்) 1. பண்டிகை 2. தேஜஸ்/ஒளி

रजो गुणे च स्त्रीपुष्पे ....

1. रजः (न)

1. ரஜ (ந-ஸ்) 1. ரஜோ குணம் 2. பெண்களின்
மாதவிலக்கில் வெளிப்படும் திரவம்
3. தூசு - இது அபி என்ற சொல்லால்
பெறப்பட்டது

.....................राहौ ध्वान्ते गुणे तमः ॥ 1432

1. तम (न/पुं)

1. தமஸ் (ந-ஸ்) 1. ராகு 2. இருள் 3. தமோ குணம்
தம: (பு-ஸ்) ராகுவுக்குப் பெயரானபோது புல்லிங்கம் என்று சிலர்

छन्दः पद्येऽभिलाषे च ....

1. छन्द (न)

1. சந்த (ந-ஸ்) 1. காயத்ரீ சந்தஸ் முதலான சந்தஸ்
2. வேதம்
சந்த: (பு-அ) 3. விருப்பம்
சந்த (ந-ஸ்)

..............................तपः कृच्छ्रादिकर्म च ।

1. तपः (पुं)

1. தப: (பு-ஸ்) 1. க்ருச்சரம் என்னும் தக்ஷிணை
2. க்ருச்ர சாந்திராயணம்
3. சிசிரருது (மாசி, பங்குனி மாதங்கள்)
தபம் (ந-ஸ்) 4. தர்மம்

सहो बलं सहा मार्गो ....

1. सहः (पुं/न)

1. ஸஹ: (பு-அ) 1. மார்கழி
ஸஹம் (ந-அ) 2. வலிமை

..........................नभः स्वं श्रावणो नभाः ॥ 1433

1. नभः (पुं/न)

1. நப: (பு-அ) 1. ஆவணி மாதம்
நபஸ் (ந-ஸ்) 2. ஆகாயம்

ओकः सद्माश्रयश्चौकाः ....

1. ओकः (पुं/न)

1. ஓக: (பு-அ) 1. வீடு/இல்லம் 2. இடம்
ஓகஸ் (ந-ஸ்) ,, ,,
3. வேகம் - இது 'ச' என்பதால் பெறப்பட்டது

........................पयः क्षीरं पयोऽम्बु च ।

1. पय (न)

1. பய (ந-ஸ்) 1. பால் 2. தண்ணீர்

ओजो दीप्तौ बले ....

1. ओज (न)

1. ஓஜ (ந-ஸ்) 1. ஒளி/தேஹ காந்தி
2. வலிமை

....................स्रोत इन्द्रिये निम्नगारये ।।1434

1. स्रोत (न)

